# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை – 2011

## கணிதம்

தரம்: 07 நேரம் : 1.30 மணி

### பகுதி - I


எல்லா வினாக்களிற்கும் இத்தாளிலேயே விடையளிக்க

01. 8350001952 ஐ நியமவடிவிலும் சொற்களிலும் எழுதுக

02. 125 ஐ வலுவாக எழுதும் போது சுட்டி 3 ஆவதற்கான அடியின் பெறுமானம் என்ன?

03. $7^2 xy^2$ ஐ விரித்தெழுதுக

04. இவ்வுருவிற்கான சமச்சீர் அச்சுக்களை வரைக



05. இடைவெளியை நிரப்புக

$$\begin{array}{r} 9\ 6\ 6\ 0 \\ -\ 6\ 4\ \square\ 6 \\ \hline 3\ 1\ 8\ 4 \end{array}$$

06. தரப்பட்ட எண்களில் எவ் எண் சோடிகளைப் பெருக்கும் போது 32 பெறப்படும்

| | | |
|---|---|---|
| 5 | 16 | 8 |
| 04 | 10 | 02 |

07. மு.ப 12.15 ஐ சர்வதேச நியம முறையில் தருக

08. m = 6 எனின் J = m – 7 ல் J ஐக் காண்க

09. $7^3$ என்ற வலுவின் பெறுமானம் யாது?

10. "SABANAYAGAM" என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களை தொடை வடிவில் எழுதுக



kalvi.lk

11. 98 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக

12. பின்வளை கோணம் ஒன்றை வரைந்து அதனை அளந்து எழுதுக

13. $(-\frac{1}{2})$ $(2\frac{1}{2})$ ஆகிய எண்களை ஒரே எண் கோட்டில் குறித்துக் காட்டுக

14. கீழே தரப்பட்ட எண் சோடிக்கு இடையே "<" அல்லது ">" எனும் குறியீட்டை இட்டு இடைவெளியை நிரப்புக?

அ) $(-5\frac{1}{2})$ ........... (-5) ஆ) (-10)......... 9

15. பின்வருவனவற்றுள் நெட்டாண்டையும் 20ம் நூற்றாண்டையும் கொண்ட ஆண்டுகள் எவை ?

2001 , 1956 , 1900 , 1901 , 1972

16. 1 – 31 இவ் எண் 3 ஆல் மீதியின்றி வகுபடுவதற்கு வெற்றிடத்தில் இடக் கூடிய சாத்தியமான பெறுமானங்களை தருக

17. 4/5 g ஐ mg ல் தருக

18. சேர்த்தி எண் ஒன்று தந்து அது சேர்த்தி எண்ணாக இருப்பதற்கான காரணத்தைத் தருக?

19. ஒரு மணிக்கூட்டில் நேரம் 8 மணியில் இருந்து 12 மணிக்கு மாறும் போது மணிக்கம்பி அசைந்த கோணத்தின் அளவு யாது?

20. இடைவெளி நிரப்புக

38 நிமிடம் + 1மணி 56நிமிடம் = .......... மணி ......... நிமிடம்

( 2× 20 = 40 புள்ளிகள்





kalvi.lk

## பகுதி II

### முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

01. நேர்விளிம்பு பாகைமானி பயன்படுத்தி பின்வரும் அமைப்பினை வரைக

i. நேர்கோட்டுத் துண்டு AB = 8cm வரைக
ii. கோணம் ABC = $110^0$ ஐ அத் துண்டில் வரைக
iii. BC = 5cm ஆகுமாறு C எனும் புள்ளியைக் குறிக்க
iv. அதே படத்தில் கோணம் BCD = $70^0$ ஐ வரைக
v. AD ஐ இணைக்க
vi. கோணம் CAD , கோணம் BAD ஆகியவற்றை அளந்து எழுதுக

02. மூன்று பெட்டிகளில் மூன்று வகையான A , B , Cஇனிப்புக்கள் உண்டு அவற்றின் எண்ணிக்கை முறையே 60 , 80 , 100 ஆகும். மூன்று வகை இனிப்புக்களிலும் சம எண்ணிக்கையான இனிப்புக்களை எடுத்து ஒரு பையினுள் இடவேண்டியுள்ளது.

1. ஒரு பெட்டியினுள் இருந்து எடுக்க கூடிய அதிகூடிய எண்ணிக்கையான இனிப்பு எத்தனை?
2. இவ்வகையாக எத்தனை பைகள் ஆக்கலாம்?
3. ஒவ்வொரு வகையிலும் எத்தனை இனிப்புக்கள் எஞ்சியிருக்கும்?

03.

a) மருந்து வில்லைகள் கொண்ட பெட்டி ஒன்றின் திணிவு 1kg 200g 100mg ஆகும். 500g 25mg திணிவுடைய வில்லைகளை விற்றபின் எஞ்சியவற்றின் திணிவு யாது?

b) 2kg 242g திணிவுடைய 6 பைக்கற்றுக்களில் உள்ள சீனி சமமான 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 4 பைகளில் இடப்பட்டது எனின் ஒரு பையில் உள்ள சீனியின் திணிவு யாது?

04. $x = 7$ , $y =$ (-5) எனின் பின்வருவனவற்றின் பெறுமானங்களைக் காண்க

a) $4y$ b) $x + y$ c) $3x^2 + y$ d) $4x^2 - 9y^2$

05.

a)

i. (-3) இற்கும் +7 இற்கும் இடையே உள்ள எண்களைக் கொண்ட எண் கோட்டை வரைக
ii. அவ்வெண் கோட்டின் மீது (-1) ஐக் குறிக்க
iii. (-1) இல் இருந்து 6 அலகுகள் நேர்த்திசையில் சென்று இறுதிப் புள்ளியைக் குறிக்க
iv. இதிலிருந்து (-1) + 6 இன் பெறுமானத்தைக் காண்க

b) இடைவெளி நிரப்புக

i. (-1) + 5 = ………..
ii. (-10) + ……….. = 10
iii. 10 + …………. = - 4
iv. ……….. + - 3 = - 4



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education
கல்வி
අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457